DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 396/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | **சூரியன்** (Pw.1 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day November of 2025

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணையின் தொடர்ச்சி:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டில் குடியிருந்தவர். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நகைகள் என்னுடையது தான். அந்த நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டுவிட்டேன். 2 தங்க காயின், 1 வளையல் செட் அடங்கிய புகைப்படம் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் கடந்த 04.12.2020 ம் தேதி போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். அங்கு சென்ற போது போலீசார் நகையை காட்டி இது தான் எனது நகையா என்று பார்த்து அடையாளம் காட்ட சொன்னார்கள் நான் இது தான் எனது நகை என்று அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரியும் அப்போது காவல் நிலையத்தில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் காலை சுமார் 9.00 மணியளவில் வந்தேன். எனது வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் மாலை சுமார் 5.00 மணியளவில் தான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். எனது மனைவிக்கு எப்போது தகவல் சொன்னேன் என்றால் சுமார் 12.00 மணியளவில் அவர் வீட்டிற்கு வந்தபின்பு தான் தெரியும். நான் காவல் நிலையம் சென்ற போது மனைவியை அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். நகை பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு வந்தவுடன் தொலைபேசி மூலம் காவல் நிலையத்திற்கு தொடர்பு கொண்டேனா என்றால் தொடர்பு கொள்ளவில்லை. எனது உறவினர்கள் தகவல் அறிந்து காவல் நிலையத்தில் புகார் அளித்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மோப்ப நாய் எத்தனை மணிக்கு வந்தது என்றால் நாங்கள் புகார் கொடுத்த சிறிது நேரத்தில் வந்தது. புகார் கொடுத்த உடனே போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டனர் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்ற போது யார் புகார் எழுதி கொடுத்தார்கள் என்றால் என்னுடன் வீட்டின் அக்கம் பக்கத்தினர் அழைத்து சென்றேன் அவர்களிடம் நான் தகவல் சொல்ல சொல்ல அவர்கள் எழுதினார்கள், படித்து காண்பித்த பின் நான் கையொப்பம் செய்தேன்.

2. அசா.2 எனது மனைவியாவர். பட்டியல் சாட்சி லட்சுமி, அஜீத்குமார், எனது உறவினர் ஆவார்கள். பட்டியல் சாட்சி ஜீவரத்தினம், சாட்சி பழனிவேல் எனது ஊர்காரர்கள் ஆவார்கள். சாட்சி சக்திமயில் எனது சம்மந்தி ஆவார். எனது உறவினர்களை மட்டும் சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது வீடு வடக்கு பக்கம் நிலை கொண்ட வீடு என்றால் சரிதான். வாசல் கிழக்கு பக்கத்தில் மீட்டர் பாக்ஸ் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டை திறந்தவுடன் ஒரு ஹால் மற்றும் இரண்டு அறைகள் உள்ளது என்றால் சரிதான்.

பூஜை அறை வீட்டிற்குள்ளே கிழக்குபக்கம் சென்று வடக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் போலீசார் வருவதற்கு முன்பு எந்த பொருட்களையும் தொடவில்லை என்றால் சரியல்ல. மோப்ப நாய் வந்த பிறகு தான் கைரேகை நிபுணர் வந்தார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு கைரேகை நிபுணர்கள் வந்தார்கள் என்றால் சுமார் 6.00 மணிக்கு மேல் இருக்கும். மோப்ப நாய் எனது வீட்டிற்கு வந்தவுடன் என்ன செய்தது என்றால் எனது வீட்டை மோப்பம் பிடித்துவிட்டு பக்கத்து வீட்டிற்கு சென்று படுத்திருந்தது. அதன் பின்னர் அதற்கு அருகில் சென்றது. மோப்ப நாய் எதிரி வீட்டிற்கு சென்றதால் எனக்கு அவர் மீது சந்தேகம் இருந்ததா என்றால் எனக்கு சந்தேகம் இல்லை. எனது வீட்டிற்கு எத்தனை போலீசார்கள் வந்தார்கள் என்றால் முதலில் சில போலீசார் வந்தார்கள், அதன் பின்பு இன்ஸ்பெக்டர் மற்றும் இதர போலீசார் வந்தார்கள். சார்பு ஆய்வாளர் இருக்கும் போது தான் மோப்ப நாய் வந்தது என்றால் சரிதான். போலீசார் முதலில் வந்த பின்பு சுமார் 30 நிமிடங்கள் கழித்து இன்ஸ்பெக்டர் வந்தார் என்றால் சரிதான்.

3. எனது வீட்டிற்கு வந்த இன்ஸ்பெக்டர் காரியாபட்டியை சேர்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை விசாரணை செய்த போலீசார் அதிகாரி என்ன பதவியில் இருந்தார், எங்குருந்து வந்தார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி லட்சுமி வாசலிருந்து இருந்து பார்த்தால் எனது வீடு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கு பின்னால் ஒரு சந்து மட்டும் உள்ளது. லட்சுமி வீடு மேற்கு பார்த்த வீடாகும். கைரேகை நிபுணர் என்னிடமோ, எனது மனைவியிடமோ கைரேகை வாங்கவில்லை, பீரோவை மட்டும் தான் பார்த்தார் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் எனது வீட்டிற்கு வந்த போது புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது வீட்டின் சாவியை மீட்டர் பெட்டிக்கு கீழே வைத்துவிட்டு சென்றதாக புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சாவியை நான் எப்போதும் லட்சுமி வீட்டில் தான் கொடுத்துவிட்டு

செல்வேன் என்றால் சரியல்ல. பீரோவில் பணம் எதுவும் வைக்கவில்லையென்றால் சரிதான்.

4. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் களவு போகவில்லை என்றாலும், பின்னிட்டு காவல் நிலையத்தில் சொன்னதின் பேரில் முன் தேதியில் புகார் அளித்தேன் என்றாலும், பொருட்களை போலீசார் கைப்பற்றிய பின்பு என்னை காவல் நிலையம் வரச்சொல்லி சான்றாவணம்–1 பெறப்பட்டது என்றாலும் சரியல்ல. நானும், போலீசாரும் மதுரையில் உள்ள IOB Bank ற்கு சென்றோம் என்றால் சரிதான். அந்த தேதி என்ன தேதி என்று எனக்கு தெரியுமா என்றால் சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்து 5 ம் தேதி சென்றோம். நகைகளை நான் எப்போது கடையில் வாங்கினேன் என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. போலீசார் எனது வீட்டிற்கு வந்த போது போட்டோ எதுவும் எடுத்தார்களா என்றால் போட்டோ எடுக்கவில்லை. சா.பொ.1 எனக்கு சொந்தமான நகைகள் இல்லையென்றால் சரியல்ல. போலீசார் வேறு வகையில் கைப்பற்றிய நகைகளை எனது நகைகள் என்று அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 396/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | மாரியம்மாள் (Pw.2 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day November of 2025

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஆவியூரில் வசித்து வருகிறேன். நான் தோட்ட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது வீட்டில் குடியிருந்தவர். நானும், எனது கணவரும் கடந்த 2020 ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை, 2 வது மாதம் காட்டில் இரவு நேரத்தில் காவலுக்கு சென்றோம். எனது கணவர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் சிறிது நேரம் கழித்து தான் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வந்தேன். நான் வந்த பார்த்த போது எனது கணவர் 40 கிராம் காயின், 50 கிராம் காயின், 4 பவுன் எடையுள்ள 2 வளையல் செட் ஆகியவற்றை காணவில்லை என்று கூறினார். அதன் பின்னர் எனது கணவர் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—**

எனக்கு சம்பவம் எத்தனை மணிக்கு தகவல் தெரியும் என்றால் காட்டில் இருந்த போது தகவல் சொல்லவில்லை, வீட்டிற்கு வந்த பின்பு 12.00 மணியளவில் தான் தெரியும். நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். நகையை பற்றிய விபரம் எனக்கு தான் தெரியும் என்றால் எனக்கும் தெரியும், எனது கணவருக்கும் தெரியும். போலீசார் நான் காட்டிலிருந்த வந்த பிறகு சுமார் 1/2 மணி நேரத்தில் வந்தார்கள். நான் வீட்டை பார்த்த போது வீடு அலங்கோலமாக இல்லை என்றால் சரிதான். நான் வந்த பார்க்கும் போது பீரோ எப்படி பூட்டிருந்ததோ அவ்வாறே தான் இருந்தது என்றால் சரிதான். பீரோவில் இருந்த கைப்பிடி நெழிந்ததாக எனது கணவர் சொன்னார் என்றால் சரிதான். எப்போது பீரோ வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீட்டிற்கு மோப்ப நாய் எப்போது வந்தது என்றால் சுமார் 5.30 மணியளவில் வந்தது. மோப்ப நாய் வந்த பிறகு தான் கைரேகை நிபுணர் வந்தார்கள் என்றால் சரிதான். நான் காட்டிலிருந்து வந்த போது போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை, எனது கணவரை தான் விசாரித்தார்கள். எங்கள் தோட்டம் குரண்டியில் உள்ளது. எங்கள் தோட்டத்திற்கு ஆவியூரில் நடந்து சென்றால் சுமார் 1.00 மணி நேரம் ஆகும். நான் புகாரில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் யார் ஏற்பாட்டின் கீழ் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனக்கு எனது கணவர் சொல்லி தான் நகைகள் காணமால் போனது பற்றி தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :—**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **CC.No. 396 /2024** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution |

| | | |
|---|---|---|
| Name | : | **ஜீவரத்தினம்** (Pw.3 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day November of 2025

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆவியூரில் வசித்து வருகிறேன். நான் TVS நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னடையது தான். நான் கடந்த 03.12.2020 ம் தேதி 8.00 மணியளவில் நானும், எனது அக்கா மகன் அஜீத்குமாரும் எனது சித்தப்பா வீட்டிற்கு நகை திருடு போனது சம்மந்தமாக கேட்க சென்ற போது அங்கு வந்த போலீசார் எங்களிடம் விசாரித்து லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில் சாட்சிகளாக நானும், அஜீத்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் **அசா.ஆ.2** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

அசா.1 எனது சித்தப்பா என்றால் சரிதான். இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் வரவில்லை. போலீசார் எத்தனை மணிக்கு படம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றால் சுமார் 8.00 மணியளவில் சூரியன் வீட்டிற்கு வெளியே படம் வரைந்து கொண்டிருந்தார்கள். போலீசார் படம் வரைந்து கொண்டிருந்த போது நான் வீட்டிற்கு வெளியே தான் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு என்னை அழைக்கவில்லை என்றால் சரிதான். நானும், அஜீத்குமாரும் ஒரே இடத்தில் தான் இருந்தோம். அஜீத்குமார் எனக்கு அக்கா மகன் ஆவார். நானும், அஜீத்குமார் காவல் நிலையத்தில் பின்னிட்டு கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக அசா.1 உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-**

இல்லை.